www.tamilarangam.net



## விடுதலைப்போராட்டத்தில்.....

(முதல் பக்கத் தொடர்ச்சி)

போராட்டமானது அரசியல், சமுதாய, பொருளாதார விடுதலைப் போராட்டமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமாயின் பெண்களின் சக்தியை தவிர்த்துச் செல்ல முடியாதென்பதை ஒவ்வொரு முற்போக்குச் சக்திகளும் அறிந்திருக்க வேண்டும். ஆனால் இவ்விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் தங்களது முழுமையான பங்களிப்பை செலுத்த முடியாத அளவிற்கு சமுதாயத்தினதும், ஆண்களினதும் அடக்கு முறைகளுக்கு இவர்கள் உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இன்று தமிழீழ பெண்கள் கருத்து ரீதியாகவும்,வன்முறை ரீதியாகவும் அடிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தமிழீழப் பெண்களின் அடிப்படை மனித உரிமைகள் யாவும் ஆண் ஆதிக்கத்தினரால் மறுக்கப்பட்டுள்ளது. இவர்கள் இச்சமுதாய அமைப்பில் மிகமோசமான சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கும், சுரண்டல்களுக்கும் காரணம் எமது சமுதாய பொருளாதார அமைப்பாகும். எமது சமுதாய அமைப்பானது நிலப்பிரபுத்துவ எண்ணப்பாடுகளையும் தனிச் சொத்துடைமையும் கொண்டிருந்த காரணத்தினால் இப்பெண் ஒடுக்குமுறை [illegible] அது தன்னுள் கொண்டுள்ளது.

பெண்கள் எமது சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கின்ற மூடநம்பிக்கைகளுக்குள்ளும், அடிமைப் பழக்க வழக்கங்களுக்குள்ளும், பிற்போக்கான கருத்துக்களுக்குள்ளும் மூழ்கிக் கிடக்கின்றார்கள். இந்த சமுதாய எண்ணப்பாடுகளை ஏற்றுக் கொண்டு தங்களையே தாங்கள் அடிமைப்படுத்திக்கொண்டும் வாழ்கின்றார்கள். இப் பெண் அடக்கு முறை என்பது இன்று நேற்று உருவாக்கப்பட்ட தொன்றல்ல; மனித சமுதாயம் வரலாற்றில் எப்பொழுது அடிமை உடமை சமுதாயத்திற்கு காலடி எடுத்து வைத்ததோ அன்றே அடக்குமுறை என்பது தோற்றம் பெற்றது. அதாவது தனிச்சொத்துடமை சமுதாயம் என்று தோன்றியதோ அதனைப் பாதுகாப்பதற்காக பெண்களும் ஆண்களது சொத்துக்களாக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டார்கள். ஆகவே பெண் அடக்குமுறையினது வரலாறு நீண்டதும் பாரியதுமாகும். இவ்அடக்குமுறையினது வடிவம் ஒவ்வொரு சமுதாய பொருளாதாரக் கட்டமைப்பிலும் மாற்றம் பெற்றும் பெறாமலும் வந்துள்ளது. பெண் அடக்குமுறை இன்று தமிழீழ சமுதாயத்தில் மாத்திரமல்ல சர்வதேச அரங்கிலும் முக்கியத்துவம் பெற்ற ஒரு பெரிய அடக்குமுறையாக இருந்துவருகின்றது.

ஆனால் இன்று தமிழீழத்தில் தவிர்க்க முடியாதபடி பெண்களும் அரசியல் போராட்டத்தில் ஈடுபட வேண்டியுள்ளது. சிறிலங்கா இனவாத அரசினது கொடூர அடக்குமுறை என்பது ஆண்களுக்கு மட்டுமல்ல. அது ஒட்டு மொத்தமாக தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்குமுறையும் ஒடுக்குமுறையாகவும் உள்ளது. இன்று எத்தனை தமிழ் பேசும் அப்பாவிப் பெண்கள் சிறிலங்கா இனவாத அரசினது கூலிப் பட்டாளங்களினால் கொடூரமான முறையில் கொலை செய்யப்படுகிறார்கள்,கைதுசெய்யப்படுகிறார்கள், சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

ஆகவே இனவாத சிறிலங்கா அரசினதும், அதன் கூலிப்படைகளினதும் கோரத் தாண்டவங்களுக்கு பெண்களும் விதிவிலக்கானவர்களல்ல. இன்று அன்றிருந்த நிலைமாறி ஒடுக்குமுறையின் உச்சக் கட்டத்தை சந்திக்கும் இவ்வேளையில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் போராடவேண்டியுள்ளனர். இவ் இக்கட்டான வேளையில் இனியும் பெண்கள் தங்களை தாங்களே அடக்கிக் கொண்டு வீட்டுக்குள் முடங்கிக்கொண்டிருந்தால் தமிழ்பேசும் இனமானது அழிக்கப்பட்டுவிடும். பெண்கள் தங்கள் கைகளில்தாங்களே அடிமைவிலங்குகளைப்பூட்டிக் கொண்டும், மூடப் பழக்கவழக்கங்களையும்கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டு தன்னைத்தானே அடக்கி கொண்டிருப்பதில்எந்தவித அர்த்தமுமில்லை ஒரு மனிதன் என்றைக்குதான் அடிமை என்று உணர்ந்துகொள்கின்றானோ அன்றே அவன் பாதிவிடுதலை அடைகின்றான். ஆகவேபெண்கள்தங்களது அடிமை நிலையினை உணர்ந்து அனைவரும் அரசியல் ரீதியாக அணிதிரண்டு, தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தில் தமது முழுமையான பங்களிப்பை செய்ய வேண்டும்.

ஆனால் தேசியவிடுதலைப் போராட்டத்தில் எவ்வாறு பெண்கள் இணைந்து கொள்ள வேண்டும் என்பது ஒவ்வொரு பெண்ணும் அறிந்திருத்தல் வேண்டும். பெண்கள் இன்று தேசியவிடுதலைப் போராட்டத்தின் பின்னணியில் பெண் விடுதலை பற்றி சிந்திக்க வேண்டும். பெண் விடுதலைக்கான அத்திவாரம் இல்லாமல் இத்தேசிய விடுதலைப் போராட்டத்தில்பெண்கள் ஈடுபடுவார்களாயின் மீண்டும் ஒடுக்குமுறைகளுக்கும்,சுரண்டலுக்கும் அவர்கள் உள்ளாக்கப்பட்டு அடிமைப்படுத்தப்படுவார்கள். பெண் அடக்குமுறையின் வரலாற்றினை அறிந்து அந்த வரலாற்றினை மாற்றியமைக்கக் கூடிய வகையில் தமது வேலைத்திட்டத்தினை முன்வைக்காமல் தேசியவிடுதலைப் போராட்டம் என்ற மட்டத்துடன் அவர்களது போராட்டம் இருக்குமாயின் பெண்விடுதலை என்பதனைப் பெறமுடியாது.

பெண் விடுதலை என்ற கருத்து எல்லா நாடுகளிலும் பலராலும் பயன்படுத்தப்படுகின்றது.எனினும் இக் கருத்தின் முழுமையான அர்த்தம் பலராலும் புரிந்து கொள்ளப் படவில்லை. இப் பெண் விடுதலையானது பல்வேறு தப்பெண்ணங்களை சமுதாயத்தின் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. பெண்விடுதலை என்பது ஆண்வர்க்கத்திற்கு எதிரான போராட்டம் எனக்கருது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றனர். குடும்பம், சமுதாயம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்ற எத்தகைய சமுதாய ஒழுக்க விதிகளுக்கும் உட்படாத வாழ்க்கையை ஏற்படுத்தும் நோக்கமே பெண்விடுதலை எனக் கருதுகின்றனர். இவ்விரு வகைக்கருத்துக்களும் பெண்விடுதலை என்ற கருத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாலும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாலும் முன்வைக்கப்படுகின்றது.

இப் பெண் விடுதலை சம்பந்தமான கருத்துக்கள் தோன்றுவதற்கு ஆதாரமில்லை என்று கூறிவிடமுடியாது. மேலைத்தேச நாடுகளில் இத்தகைய கருத்துக்களை பெண் விடுதலை இயக்கங்கள் முன் வைத்துள்ளன. குறிப்பாக அமெரிக்காவில் அறுபதுகளில்தோன்றியபெண் விடுதலை இயக்கங்களின் கருத்துக்களாக மேற்கூறியவை காணப்பட்டன. இக் கருத்துக்களை கொண்ட பெண்விடுதலைநோக்கமாகத்தான் இவர்கள் செயற்பட்டு வந்துள்ளனர்.

ஆனால்எத்தகையகோட்பாடும், கருத்தோட்டமும் நாட்டுக்கு நாடு வெவ்வேறு சமுதாய பொருளாதார அமைவிற்கு ஏற்ப வேறுபடுவது என்பது நியதி. அந்தந்த நாட்டு வரலாற்று சமுதாயபொருளாதார அரசியல் நிலைமைகளே இந்த வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன. ஆகவே பெண்விடுதலை என்பது சர்வதேச ரீதியான பொதுவான ஒரு கோட்பாடாக இருப்பினும் வளர்ந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போலல்லாதுஎமது நாடு உட்பட கீழைத் தேசநாடுகளில் அதன் கருத்துப் பரிமாணம் வேறுபடுகின்றது.

எமது நாட்டைப்பொறுத்தவரை பெண்விடுதலை தனிநபர் சுதந்திரம் என்ற வகையில் மட்டுமன்றி சமுதாய விடுதலையின் ஒரு முக்கிய படியாகும் எமது தமிழீழத்தைப் பொறுத்தவரை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இன்று சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரது பங்கும் மிக முக்கியமானதாகும். எனவே இங்கு பெண்விடுதலை என்பது சமுதாய விடுதலையுடன் ஒன்றிணைந்ததாகவும் சமுதாய விடுதலைக்கு அத்தியாவசியமான ஒன்றாகவும் உள்ளது.

ஆகவே இந்த உண்மை நிலையினை உணர்ந்து அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடுகின்ற ஒவ்வொரு விடுதலைப் போராளியும் சமூகத்தின் பாரிய அடக்குமுறையான பெண் அடக்குமுறைக்கும் எதிராகப் போராட வேண்டும். அவ்வாறு இல்லாமல் அந்த அடக்குமுறையை நியாயப்படுத்துவதுடன் அவ் அடக்குமுறையை தங்களுக்குள் வைத்துக் கொண்டு அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடுகின்றோம் என்று வாயளவில் கூறிக் கொள்பவர்கள் எல்லாம் போலிப் புரட்சிவாதிகளே. ஆகவே தேசிய விடுதலைப் போராட்டமாயினும், தேசிய நிர்மாணமாயினும் பெண் விடுதலையை உள்ளடக்காவிடின் அங்கே பூரணத்துவமான விடுதலையை அடைய முடியாது என்பதனை வரலாறு எமக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

எந்தவித அடக்குமுறைகளும், ஒடுக்குமுறைகளும், சுரண்டலையும், தனிச் சொத்துடைமையும் கொண்டிருக்கின்றசமுதாய பொருளாதார அமைப்பில் தான் இருக்கும். அச் சமுதாய அமைப்பில்கீழ் கட்டுமானமான பொருளாதாரமும் மேல்கட்டுமானமான கருத்துருவங்களும் தான் இவ் அடக்குமுறைக்கு அடிப்படைக் காரணமாகும். இந்தவகையில் தமிழீழத்தின் சமுதாய அமைப்பானது நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்களையும் முதலாளித்துவத்தின் சிந்தனையையும் கொண்ட ஒரு சொத்துடமை சுரண்டலைக்கொண்டதாகும். ஆகவே இங்கு பெண்விடுதலை என்பது இச் சமுதாய அமைப்பினை மாற்றி அமைக்கின்ற சமுதாயப் புரட்சியின் மூலமே பெறமுடியும். பெண் விடுதலை என்பது பெண்களது அடிப்படை மனித ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்கும், மனிதஉணர்வுகளை மதிப்பதற்கும், பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவதற்கும் சமுதாயப் பொறுப்புணர்வுகளோடு இருக்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கு மாறாக பெண்விடுதலை என்பது சமூக சீர்திருத்தம் என்ற போர்வையில் பெறமுடியாது. இச் சீர்திருத்தப் போக்கானது உண்மையான பெண்விடுதலையை மழுங்கடிக்கும். சீர்திருத்த பெண்விடுதலைப்போக்கானதுஅராஜகமாகப் பரிணமித்து போலித்தனமான ஆதாரங்களைச் சேர்த்துக்கொண்டு பேராபத்தான நிலைக்கே இட்டுச் செல்லும் சில வேளை மேற்கு ஐரோப்பிய நாடுகள் போன்று சமுதாய அழிவிற்கும், ஒழுக்கக் கேட்டிற்கும், மனோரீதியான அழிவிற்கும் இட்டுச்செல்லும். ஆகவே பெண்கள் இப்பின்னணியை உணர்ந்து தங்களை தாங்களே அடக்கிக் கொண்டிருப்பதனை விட்டுவிட்டுபெண்விடுதலைக்கான வரலாற்று விதியினை உணர்ந்துஅடிமைத்தனங்களையும், சுரண்டலையும் கொண்டிருக்கிற சமுதாயபொருளாதார அமைப்பை மாற்றுவதற்காக சமுதாயப் புரட்சியில் பெண்கள் அனைவரும் ஈடுபட வேண்டும். இதற்கு இன்றைய அரசியல் போராட்டத்தை மூல உபாயமாக பயன்படுத்தி சித்தாந்த தெளிவோடு அனைத்துப் பெண்களையும் அரசியல் ரீதியாக அணிதிரட்டி தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதுடன், சுரண்டலற்ற அடிமைத்தனங்களற்ற பொதுவுடமைச் சமுதாயத்தை உருவாக்குவதற்கு சமுதாயப் புரட்சியை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். அப்போது தான் பெண்கள் சுதந்திர மனிதர்களாக வாழ முடியும்.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் நிலப்பிரச்சினையும், சிங்களக்குடியேற்றமும்.

முஸ்லிம் மக்களுடைய பாரம்பரிய தாயகமாக திகழும் அம்பாறை மாவட்டம் 4533, 944 கிலோ மீட்டர் (1752.4 ச. மைல்) பரப்பைக் கொண்டது. இலங்கையிலுள்ள செறிவு குறைந்த மாவட்டங்களில் ஒன்றான இம்மாவட்டத்தில் மொத்தமாக 3,88,786 மக்கள் வாழ்வதாக கணிக்கப்பட்டுள்ளது இவர்களுள் 1,61,754 முஸ்லிம்களும், 1,46,371 சிங்களவர்களும், 78,315 தமிழர்களும் அடங்குகிறார்கள். இம்மாவட்டத்தின் வந்தேறு குடிகளான சிங்கள மக்கள் 1947ம் ஆண்டில் 1384 பேராகவே இருந்தனர். ஆனால் மாறிமாறி வந்த அரசாங்கங்களின் திட்டமிட்ட குடியேற்றக் கொள்கையினாலும், பிரதேச இணைப்புக் கொள்கையினாலும் இன்று இவர்களின் எண்ணிக்கை 1,46,371க்கு மேலாக அதிகரித்துள்ளது. இம்மாவட்டத்திலுள்ள பதினொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நான்கு சிங்களப் பகுதிகளுக்குரிய பிரிவுகளாகவே தற்போதுஉள்ளன.

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் முஸ்லிம் மக்களிற்கென்றிருந்த ஒரே ஒரு மாவட்டமான அம்பாறை மாவட்டம்-

(அ) சிங்களக் குடியேற்றம்.
(ஆ) காணிச்சுவீகரிப்பு.
(இ) பிரதேச இணைப்பு.
(ஈ) புதை பொருளாட்சி.
(உ) புனிதப் பிரதேச பிரகடனம்.

போன்ற சிறிலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் ஒரு சிங்கள மாவட்டமாக மாற்றப்பட்டு வருகின்றது. அம்பாறை மாவட்டத்தை ஒரு சிங்கள மாவட்டமாக மாற்ற வேண்டுமென்ற எண்ணம் சிங்களத் தலைவர்களுக்கு ஆரம்பத்திலேயேஇருந்திருக்கிறது. 1941ம் ஆண்டு இலங்கையின் விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்குமுகமாக முதல் மரத்தை சம்பிரதாயபூர்வமாக வெட்டி விட்டு உரையாற்றும் போது

"இன்று என்னால் வெட்டப்பட்ட முதல் மரம் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் முதற்கருவாக்கத்தின் மூலக்கூறு. இக்கரு தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும் இக்கரு சிதைவுறாமல் பா காக்கப்படவேண்டும். இது இப்பிரதேச மக்களின் தலையாய கடமையாகும். இங்கு கடற்கரைப் பிரதேசத்தில்தான் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். இம்மக்கள் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வாழ முன்வரவேண்டும்.

அவ்வாறு அவர்கள் இங்கு வாழ முன்வராவிட்டால் பிற பிரதேசத்தவர் இங்கு வந்து குடியேறுவர்" என்று குறிப்பிட்டுள்ளார். இவரது பேச்சின் கடைசி வசனம் வெளி மாவட்டத்திலிருந்து சிங்கள மக்களை அம்பாறை மாவட்டத்திற்குள் கொண்டு வந்து குடியேற்ற வேண்டும், என்கிற எண்ணம் அவருக்கு இருந்ததை புலப்படுத்துகின்றது. உண்மையில் டி. எஸ். சேனநாயக்காவின் நோக்கப்படி கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் 38 கிராமங்கள் சிங்களக் கிராமங்களாகும். இக்கிராமங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் வெளி மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்டவர்களாகும்.

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் முஸ்லிம் மக்கள் இம்மாவட்டத்தில் மிகப் பெரும்பான்மையினராகவும், தமிழ் மக்கள் இரண்டாவது பெரும்பான்மையினராகவும் சிங்கள மக்கள் மிகச் சிறுபான்மையினராகவுமே இருந்தனர். ஆனால் இன்று சிங்கள மக்களின் எண்ணிக்கை தமிழ் மக்களின் எண்ணிக்கையையும் தாண்டி முஸ்லிம் மக்களுக்கு சமமாக வந்து கொண்டிருக்கின்றது. மொத்தச் சனத்தொகை ரீதியாக பார்க்கும்போது 1971ம் ஆண்டு தொடக்கம் 1981ம் ஆண்டுவரையுள்ள 10 ஆண்டு காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் சிங்களவருடைய எண்ணிக்கை 78%த்தாலும், முஸ்லிம் மக்களுடைய எண்ணிக்கை 27%த்தாலும், தமிழ் மக்களுடைய எண்ணிக்கை 25%த்தாலும் அதிகரித்துள்ளது.

| | 1971 | 1981 | அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|
| சிங்களவர்கள் | 82, 280 | 1, 46, 371 | 78% |
| முஸ்லிம்கள் | 127, 308 | 1, 61, 754 | 27% |
| தமிழர்கள் | 62, 290 | 78, 315 | 25% |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கு முஸ்லிம் தமிழ் மக்களுடைய அதிகரிப்பு வீதம் இயற்கையான அதிகரிப்பு வீதாசாரத்தை ஒத்தாகும். சிங்கள மக்களுடைய அதிகரிப்பு வீதமானது இயற்கை அதிகரிப்பு வீதத்தைவிட மும்மடங்கு அதிகரித்துக் காணப்படுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த அதிகரிப்பு வீதமானது இவ்வாறே 10 ஆண்டு காலத்துக்கு தொடருமாக இருந்தால் அம்பாறை மாவட்டம் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வாழும் மாவட்டமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

அம்பாறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்களை சிறுபான்மையினராக்கவும், அவர்களுடைய பாரம்பரிய நிலங்களைப் பறிப்பதற்கும், மாறிமாறி வந்த சிறிலங்கா ஆட்சியாளர்கள் பல்வேறு சூழ்ச்சிகளையும், தந்திரங்களையும் பல்வேறு காலகட்டங்களில் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். அவற்றில் முக்கியமானவை:—

அ) பிற சிங்களப் பிரதேசங்களை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்தல்.

ஆ) அம்பாறைமாவட்டத்திலுள்ள முடிக்குரிய காணிகளில் வேறு மாவட்டத்திலுள்ள சிங்களவர்களைக் கொண்டு வந்து அத்துமீறிக் குடியேற்றல்.

இ) முஸ்லிம் மக்களுக்கு சொந்தமானகாணிகளில் அத்துமீறிக் குடியேற வைத்தல்.

ஈ) முன்னர் முஸ்லிம்களிடம் சுவீகரிக்கப்பட்ட காணிகளைப் பின்னர் சிங்களவர்க்கு பிரித்துக்கொடுத்தல்.

உ) பொது நோக்கம் என்ற பெயரில் காணிகளைச் சுவீகரித்தல் என்பனவாகும்.

(அ) முதலாவதாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் அம்பாறை மாவட்டத்துடன் பிற பிரதேசங்களை இணைத்தல் மூலம் முஸ்லிம் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசத்திலேயே சிறுபான்மையினராக்குவதற்கு முயன்று வந்துள்ளனர். உதாரணமாக மொனராகலை மாவட்டத்துடன் இருந்த மகாஓயாவையும், பதியத்தலாவையும் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதனால் அம்பாறை மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களின் எண்ணிக்கை 26,519 ஆக அதிகரித்தது. இவ்வாறு வேறு மாவட்டத்திலுள்ள பிரதேசங்களை அம்பாறைமாவட்டத்துடன் இணைப்பதற்கு அம்பாறை மாவட்டத்தை சிங்கள மாவட்டமாக மாற்றவேண்டுமென்ற ஒரே நோக்கமேயன்றி வேறு காரணம் ஏதுமில்லை. பெயரில் கூட 'தமிழ்' இருக்கக்கூடாது என்பதற்காகவே அம்பாறை என்ற பெயர் கூட 'திகாமடுல்ல' என்று மாற்றப் பட்டுள்ளது.

(ஆ) இரண்டாவதாக அம்பாறை மாவட்டத்திலுள்ள முடிக்குரிய காணிகளில் பிற மாவட்டங்களை சேர்ந்த சிங்கள மக்களை கொண்டு வந்து குடியமர்த்துவதன் மூலம் சிங்கள மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் முனைந்து வந்திருக்கிறார்கள். கல்லோயா திட்டம் என்ற பெயரில் ஆரம்பகாலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த இம்முயற்சியானது இன்று பல்வேறு பெயர்களில் தொடர்ந்து வருகிறது. 1947ம் ஆண்டு 3000ஆக காணப்பட்ட சிங்கள மக்களின் எண்ணிக்கை 1981ல் 1,46,371ஆக அதிகரித்துள்ளது என்றால் அதற்கு காரணம் இத்தகைய திட்டமிட்ட குடியேற்றதிட்டமே ஆகும். 1960-63காலப் பகுதிக்கு முன் அம்பாறை மாவட்டம் என்ற ஒரு மாவட்டமோ இன்றைய அம்பாறை (திகாமடுல்ல) என்ற சிங்கள பாராளுமன்றத் தொகுதியோ இருக்கவில்லை. அன்றிருந்த கிழக்கு மாகாணத்தின் தென் பகுதிதான் இன்றைய அம்பாறை மாவட்டமாகும். அன்று இப்பகுதியில் கல்முனை, பொத்துவில், என்ற இரண்டு பாராளுமன்றத் (தமிழ்) தொகுதிகள்தான் இருந்தன. இவ்விரண்டு தொகுதிகளிலும், தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இணைந்தே வாழ்ந்தனர். இக்காலப் பகுதிக்குப் பின்னர்தான் சிறிலங்கா ஆட்சியாளர்கள் அம்பாறை என்ற சிங்களத் தொகுதியொன்றை உருவாக்கி அதில் பெருமளவு சிங்கள மக்களை கொண்டுவந்து குடியேற்றி மொனராகலை மாவட்டத்தின் சில பகுதிகளையும் இணைத்து இன்றைய அம்பாறை மாவட்டத்தை உருவாக்கினார்கள். உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மக்களுடைய அதிகரிப்பு விதமானது விகிதாசாரஅடிப்படையில் பின்வருமாறு அமைந்தது.

| கால இடைவெளி | முஸ்லிம்வர்க்காளர் அதிகரிப்பு | சிங்கள வர்க்காளர் அதிகரிப்பு | சிங்களக் குடியேற்றம் |
|---|---|---|---|
| 1947-52 | 13% | 30% | 17% |
| 1952-56 | 5% | 25% | 20% |
| 1956-60 | 9% | 500% | 491% |
| 1960-65 | 9% | 55% | 26% |
| 1965-70 | 9% | 26% | 17% |
| 1970-77 | 10% | 13% | 3% |
| 1977-82 | 28% | 64% | 36% |

(9ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய விடுதலைப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்த இடமளியாதீர்!

(முதற்பக்கத் தொடர்ச்சி)

பல் கூறுகளிலும் இருந்ததால் இரு இன முதலாளிகளிடையேயும் ரண்பாடு ஏற்பட்டது.) வளர்ந்து வந்த சிங்கள முதலாளிகளின் பிரதிநிதியாக சிங்கள மக்கள் மத்தியில் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்திய அநாகரிக தர்மபாலா போன்றோரின் தேசிய வாதமானது குறுகிய தேசிய வாதமாக வெளிப்பட்டு தமிழ் இனத்தின் மீதான இனவாதத்தை வளர்த்தது.

இவ்வினவாதமானது படிப்படியாக வளர்ந்து தமிழினத்தின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதிலும், தமிழரின் பாரம்பரிய நிலத்தைப் பறிப்பதிலும், ஆரம்பித்து மொழியுரிமை பறிப்பு, இனப்படுகொலை என வளர்ந்தது.

இக்காலகட்டத்தில் தமிழினத் தலைவர்கள் எனப்பட்டோர் தம் வர்க்க நலன்கள் பாதிக்கப்படாத நிலையிலேயே தமிழின உரிமைக்கான போராட்டங்களை நடாத்தினார்கள். இந்நடவடிக்கையானது சிங்கள இனவாதத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் இத்தலைவர்களை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தூக்கி எறிந்தது.

அன்மைக் காலங்களில் தமிழினத்திற்கெதிரான கீழ்வரும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் படிப்படியாக வளர்ந்து உச்சக்கட்டத்தை அடைந்தது.

1. திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றத்தின் மூலம் தமிழர் நிலம் பறிக்கப்பட்டது.

2. சிங்களம் மட்டும் சட்டம் மூலம் தமிழ் மொழி இரண்டாவது பட்சமாக்கப்பட்டது.

3. படிப்படியாக அரச உத்தியோகத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

4. தமிழர் பகுதிகள் பொருளாதார வளர்ச்சியில் புறக்கணிக்கப்பட்டதோடு, தமிழ்ப் பகுதிப் பொருளாதார வளங்கள் சுரண்டப்பட்டது.

5. தமிழ் மாணவரின் உயர்கல்வி வாய்ப்புக்கு தடைப்புச் செய்யப்பட்டது.

மேற்கண்ட நிலையிலேயே தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்து தேசிய இன விடுதலைப் போராட்டமாக பரிணமித்தது.

இந்நிலையில் தமிழ்த் தலைவர்கள் தமது வர்க்க நலன்களுக்குக் கட்டுப்பட்டு இத்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியாமல் போனதால் இளைஞர் தலைமையிலான ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட இயக்கங்கள் வளர ஆரம்பித்தன. இப்படியாகத் தோன்றி வளர்ந்து வந்த இயக்கங்களானது தமது பரிணாம வளர்ச்சியில் கண்ட அநுபவங்கள், முரண்பாடுகள், பெற்றுக்கொண்ட படிப்பினைகள் பரந்துபட்ட மக்களை அணி திரட்டவும், அரசியல் மயப்படுத்தவும், சர்வதேச ரீதியாக ஒடுக்கப்படும் உழைக்கும்மக்கள் இயக்கங்களுடன் ஐக்கியப்பட வேண்டிய தேவையையும் உணர்த்தியது.

இப்படிப்பினைகளைப் பெற்றுக் கொண்ட சில அமைப்புக்கள் இன்று மக்களை அணிதிரட்டி அரசியல் மயப்படுத்தி தமது போராட்டங்களை சர்வதேச உழைக்கும் மக்களியக்கங்களுடனும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுடனும், சிறிலங்காவிலுள்ள சிங்கள உழைக்கும் மக்கள் இயக்கங்களுடனும் ஐக்கியப்படுத்தி ஒரு தெளிவான கண்ணோட்டத்தில் போராட்டத்தை வளர்த்து வருவதால் சிறிலங்கா ஆளும் வர்க்கம் கிலி கொண்டுள்ளது. தனக்கு வரும் ஆபத்தை உணர்ந்துள்ளது.

தனக்கு வரும் ஆபத்தை தெளிவாக உணர்ந்துகொண்ட சிறிலங்கா அரசு தமிழீழப் போராட்டத்தை ஒரு தேசிய இனத்தின் போராட்டமாக அல்லாமல் வெறும் இனக்கலவரங்களாகவும், மதக்கலவரங்களாகவும் காட்டப் பகிரப் பிரயத்தனம் எடுத்து வருகிறது. சிறிலங்கா அரசின் இச்சதிவலைக்குள் விளாமல் இருப்பது பொறுப்புள்ள இயக்கங்களின் கடமையாகும்.

சிறிலங்கா அரசின் இச்சதி முயற்சியானது இயக்கங்கள் எங்காவது ஒருசிறு தாக்குதல் நடத்தினால் அதைத் தொடர்ந்து தமிழரின் வழிபாட்டுத் தலங்களை இடிப்பதும், ஏராளமான அப்பாவிகளைக் கொலை செய்வதும், ! இளைஞர்களைக் கைது செய்வதும், இளம் பெண்களை மானபங்கப்படுத்துவது போன்ற செயல்கள் மூலம் விடுதலை அமைப்புகளை உணர்ச்சி கொள்ளச் செய்து, பழிக்குப்பழி என்ற உணர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமும்; சிங்கள மக்களையும், அவர்களின் வழிபாட்டுத் தலங்களையும் தாக்கி சேதப்படுத்த வைப்பதன் மூலமும் தன்னிலிருந்து அந்நியப்பட்டுப் போகும் சிங்கள உழைக்கும் மக்களை தனக்காதரவாக அணிதிரட்டவும், உலக அரங்

(12-ம் பக்கம் பார்க்க)

பாட்டாளி வர்க்கத்தின் விடிவுக்காய் சிந்தனையைத் திட்டிய செங்கதிரே தமிழீழ விடுதலையின் ஊடாக உன் இலட்சியத்தை வென்றெடுப்போம்.

5.8.1895

ஏங்கல்ஸ் நினைவுநாள்

www.tamilarangam.net



# நமீபியா மக்களின் விடுதலைப் போராட்டம்

ஐரோப்பிய முதலாளித்துவ வாதிகளும், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் தென் ஆபிரிக்க அரசோடு இணைந்து நமீபியா நாட்டின் இயற்கை வளங்களை சூறையாடினர். வெள்ளையர்களின் குடியேற்றம் துரிதமாக்கப்பட்டது. உதாரணமாக 1913 இல் குடியேறிய வெள்ளையர்களின் எண்ணிக்கையை விட 1923 இல் இருமடங்கு பேர் குடியேறினர். இத்தகைய தென் ஆபிரிக்கக்காரரின் காலனித்துவ ஆட்சியில் 1931 இல் 31,000 வெள்ளையர்கள் 38மில்லியன் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்தனர். பூர்வீகக் குடிகளான 253,000 நமீபிய மக்களிற்கு 17 மில்லியன் நிலம் என்ற விகிதத்தில் அம்மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. தமக்கு முன்பு அம்மக்களை ஆண்ட ஜெர்மனியர்கள் போல தென் ஆபிரிக்கர்கள் நமீபிய நாட்டு மக்களின் அரசியல் அடிப்படை உரிமைகளுக்குத் தடைச்சட்டம் விதித்தனர். 1922 இல் தென் ஆபிரிக்க நிறவெறி அரசு அடையாள அட்டைச் சட்டத்தை அமுல்படுத்திற்று மேலும் நமீபிய நாட்டு மக்களிடமிருந்து குறைந்த சம்பளத்திற்குக் கூலித்தொழிலாளர்களைப் பெறுவதற்கும் வழிவகைகள் செய்தது.

இவ்வாறு தென் ஆபிரிக்க அரசு சர்வதேச நாடுகளின் சங்கத்திற்கு நமீபியா நாட்டு மக்களின் மீது செலுத்தும் நிர்வாகம் குறித்து கொடுத்த ஆணையை மீறி அம்மக்கள் மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விடலாயிற்று. அம்மக்களுக்கு சுதந்திரம் வழங்குவதற்குத் தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற சர்வதேச நாடுகள் சங்கத்திற்குக் கொடுத்த ஆணையை மீறி அந்நாட்டை இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் உட்படுத்திற்று.

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்பு 1945இல் முன்பிருந்த சர்வதேச நாடுகள் சங்கத்திற்குப் பதிலாக ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட பொழுது ஐ.நா. சர்வதேச நாடுகள் சங்கம் ஒரு ஆணையின் பேரில்நமீபியாவை நிர்வகிக்கும் பொறுப்பைப் பெற்ற தென் ஆபிரிக்கா அரசிடம் நமீபிய நாட்டின் அரசியல் நிர்ணயம் தொடர்பாகச் சர்வதேச நாடுகள் சங்கம்அல்லாத வேளையில் அதற்குப் பதிலாக அமையப் பெற்ற ஐ.நா. விற்குப் பொறுப்பிருக்கிறது எனஉரிமை கொண்டாடிற்று. ஐ.நா.பொதுச்சபை, தென் ஆபிரிக்கா அரசு நமீபியாவில் அது நடாத்தும்ஆட்சி குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானத்தை நிறைவேற்றிற்று.

### ஐ. நாவும் நமீபியா மக்கள் விடுதலைப் போராட்டமும்

சர்வதேச நாடுகள் சங்கத்திற்குப் பதிலாக தோற்றுவிக்கப்பட்ட ஐ.நா. சபை நமீபிய மக்களின் அரசியலை நிர்ணயிற்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றது. இவ்வடிப்படையில் நமீபிய நாட்டின் மீது தென் ஆபிரிக்க அரசு நடாத்தும் ஆக்கிரமிப்புகளை ஐ.நா.சபை கவனத்திற்கு எடுத்துக் கொண்டது இதன் அடிப்படையில் 1966 ஆம் ஆண்டு முதலாவது உலக மகா யுத்தத்தின் பின்பு சர்வதேச நாடுகள் சங்கத்தின் ஆணையின் பிரகாரம் நமீபியாவை நிர்வகித்து வந்த விதத்தில் தென் ஆபிரிக்கா அவ் ஆணையின் பிரகாரம் தன் கடமைகளை நிறைவேற்றத் தவறி விட்டது என்றும் நமீபிய நாட்டு மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவதற்கான ஆயத்தங்கள் எதையும் சரியாக செய்து வரவில்லை என்றும், அவ் ஆணையின் பிரகாரம் நமீபியா நாட்டை நிர்வகிக்கத் தவறி விட்டது என்றும் நமீபியா மக்களின் மனித உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டனவென்றும், அந்நாட்டின் வளங்களைப் பாதுகாப்பதை விடுத்து தென் ஆபிரிக்கா அவற்றை சுரண்டி வருகின்றது என்றும் ஐ.நா .பொதுச்சபை தென் ஆபிரிக்கா மீது குற்றம் சாட்டியது. இதைத் தொடர்ந்து 27-10-1966 இல் தென் ஆபிரிக்கா சர்வதேச நாடுகள் சங்கத்தின் ஆணையின்படி நமீபியாவை நிர்வகிக்கத் தவறி விட்டதால் தென் ஆபிரிக்காவிற்கு நமீபியா நாட்டை நிர்வகிக்க இனி மேலும் உரிமை இல்லை என்றும் அவ்வடிப்படையில் அப்பிராந்தியத்திற்கு ஐ.நா, சபையே பொறுப்பென்றும் அறிவித்தது. இவ்வாறு நமீபியா நாட்டு மக்களின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட ஐ.நா. சபை 1967 ஆம் ஆண்டு நமீபியாவிற்கான ஐ. நா. குழு எனும் சபையை நிறுவிற்று. இச்சபையே நமீபியாவின் முழு நிர்வாகத்திற்கும், நமீபியா சுதந்திரம் அடைவதற்கான ஆயத்தங்களை செய்வதற்கும் பொறுப்பாக இயங்கும் என அறிவித்தது. 1968 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபை அப்பிராந்திய மக்களின் விருப்பிற்கு ஏற்ப முன்பு தென்மேற்கு ஆபிரிக்கா எனக் குறிப்பிடப்பட்ட அப்பிராந்தியம் இனிமேல் நமீபியா என அழைக்கப்படல் வேண்டும் என தீர்மானித்தது. இவ்வாறு ஐ.நா. தென் ஆபிரிக்கா, நமீபியாவில் புரியும் ஆட்சி சட்டவிரோதமானது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்றும் இனிமேல் தென் ஆபிரிக்கா நமீபியாவை நிர்வகிக்க உரிமை இல்லை என்றும் தீர்மானித்த போதும் தென் ஆபிரிக்க நிற வெறி அரசு ஐ.நா. தீர்மானங்களை புறக் கணித்தது. மேலும் ஐ.நா. பொதுச் சபை உருவாக்கிய நமீபியாவிற் கான ஐ நா. சபையையும் அதன் கட்டுப்பாடுகளைச் செய்வதற்கு நமீபியாவிற்குள் செயல்படத்தடை விதித்தது. ஆயினும் நமீபியாவிற் கான ஐ.நா. சபை (குழு) தன் கடமைகளை நிறைவேற்றத் தொடங்கிற்று.

1967 ஆம் ஐ.நா. பொதுச் சபை யினால் தோற்றுவிக்கப்பட்ட இக் குழுவில் முதலில் 11 நாடுகள் பங்கு கொண்டன. பின்பு 1972 இல் 18 நாடுகள் அங்கம் வகித்தன. 1974 இல் 25 நாடுகளும், 1978இல் 31 நாடுகளும் பங்குகொள்ளும் அள விற்கு இச்சபை பெரும் ஆதரவைப் பெற்றது. இவ்வாறு பல நாடுகள் பங்கேற்கும். இச்சபை நமீபிய மக்களின் சுதந்திரத்திற்காகபின் குறிப்பிடப்படும் தன் கடமைகளை வகுத்து செயல்பட்டு வருகிறது.

1. நமீபியா நாட்டிற்கு முழுச் சுதந்திரம் கிடைக்க வழிவகை செய்யப்படல் வேண்டும் எனஐ.நா. வை வற்புறுத்துவது

2. தென் ஆபிரிக்கா நிற வெறி அரசினது நமீபிய மக்கள் மீதான ஆர்ப்பரிப்புக்களையும், நிறவெறி அரசின் அம்மக்களிற் கெதிரான கொள்கைகளையும், நடவடிக்கை களையும் வெளி உலகிற்கு வெளிப் படுத்துவது

3. தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் கழகத்தின் தலைமையின் தென் ஆபிரிக்க ஆட்சிக்கெதிராக நமீபிய நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நிதி உதவி வழங்குதல், கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களைஅளித்தல், பிரயாணத் திற்கான பத்திரங்கள் வழங்கல், நமீபிய மக்களை இச்சபையில் பங்குறச் செய்தல்போன்ற அலுவல் களில் ஈடுபடுதல்.

4. 21-ஆனி (யூன்) 1971-இல் தெரிவிக்கப்பட்ட சர்வதேச நீதி மன்றத்தின் ஆலோசனைக் கருத்து டன் (அதாவது தென் ஆபிரிக்க ஐ.நா. தீர்மானத்திற்கு எதிராக மேலும் அந்நாட்டை நிர்வகிப்பது சர்வதேச சட்டத்திற்குப் புறம்பா னது) நமீபிய பற்றிய ஐ.நா. சபை யின் தீர்மானத்துடனும், இச்சபை யின் அங்கத்துவம் உள்ள நாடு களின் செயல்பாடுகளை உறுதிப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

> ''உன் துப்பாக்கிக் குண்டு கள் எம் உடலைத்துளைக் கலாம்-உயிரைக் குடிக்க லாம். உயிரினும் மேலான சுதந்திர உணர்வை அவை என்ன செய்யும்?''
>
> —காஸ்ரோ

5. நமீபியாவில் வெளிநாட்டு முதலீடுகளின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதோடு, இத் தகைய வெளிமுதலீடுகள் எங்ஙனம் தென் ஆபிரிக்கா நமீபியா மீது சட்டவிரோதமான நிலை கொள்ள லுக்கு உதவுகிறது என எடுத்துக் காட்டுதல்.

6. தென் ஆபிரிக்காவை நமீபிய விலிருந்து வெளியேறச் செய்வதற் கான தீர்க்கமான நிர்பந்தங்களை இச்சபையின் அங்கத்துவ நாடு களின் அரசாங்கங்களுடன் ஆலோ சித்துச் செயல் படுத்தல்.

7. நமீபியா நாட்டின் நலன் கருதி சர்வதேசஅமைப்புக்களிலும், மாநாடுகளிலும் பங்குகொள்ளல்

8. நமீபியாவைப் பற்றிப் பிரச் சாரத்தை அதிகரித்தல்.

9. நமீபியாவிற்கான ஐ. நா. நிதியை நிர்வகிப்பதற்குப் பணம் சேகரித்தல் இவ்விதத்தில் பல்வேறு கடமைகளில் ஈடுபட்டு வரும் இச் சபை நமீபியாவின் இயற்கை வளங் களை பாதுகாக்கும் விதத்திலும் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு நமீபியாவிற்கான ஐ.நா. சபை இயங்கி வரும் வேளையில், தென் ஆபிரிக்கா இச்சபையின் நடவடிக் கைகளிற்கு நேர் எதிராக நமீபி யாவை தனது இராணுவ ஆக்கிர மிப்பிற்குள் உட்படுத்தி வருகிறது.

(தொடரும்)

## அம்பாறை மாவட்டத்தில்.......

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒப்பீட்டு ரீதியாக இப்புள்ளி விபரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது முஸ்லிம்களுக்கும், சிங்கள ருக்கும் இடையிலான அதிகரிப்பு வீதமானது ஒன்றுக்கு பத்து (1:10) என்ற அடிப்படையில் அமைந்துள் ளது. அதாவது ஒரு முஸ்லிம் அதி கரிக்க பத்து சிங்களவர்களும் அதி கரிக்கப்படுகிறார்கள். இந்த அடிப் படை தொடருமாக இருந்தால் 1992ல் முஸ்லிம் வாக்காளரைவிட 7000 பேராவது இம்மாவட்டத்தில் அதிகமாக காணப்படுவார்கள்.

(இ) இம் மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்களைச் சிறுபான்மையி ராக்குவதற்கு அவர்களது அரசியல் பொருளாதார நிலைமைகளை சீர் குலைப்பதற்குமாக சிறிலங்கா ஆட் சியாளர்களால் மேற்கொள்ளப் பட்டுவருகின்றஅடுத்த நடவடிக்கை அத்துமீறிய குடியேற்றமாகும். தமிழ்—முஸ்லிம்களுடைய பாரம் பரிய நிலங்களில் புத்தர் சிலையைக் கொண்டு வந்து வைப்பதும் பின்னர் அச்சிலைக்கு ஆலயம் எழுப்புவதும், அதைச் சுற்றி சிங்கள மக்களைக் குடியேற்றுவதும் அம்பாறை மாவட்டத்தில்சர்வசாதாரணமான நிகழ்ச்சியாகும். இன்னொரு விதத் தில் ஆட்சியாளர்களே இரகசியமாக புத்தர் சிலைகளை தமிழ்-முஸ்லிம் மக்களுடைய நிலங்களில் புதைந்து மறைத்துவிட்டு பின்னர் புதைபொ ருள் ஆராய்ச்சி என்ற பெயரில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய விடுதலைப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்த இடமளியாதீர்!

(முதற்பக்கத் தொடர்ச்சி)

பல் கூறுகளிலும் இருந்ததால் இரு இன முதலாளிகளிடையேயும் முரண்பாடு ஏற்பட்டது.) வளர்ந்து வந்த சிங்கள முதலாளிகளின் பிரதிநிதியாக சிங்கள மக்கள் மத்தியில் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்திய அநாகரிக தர்மபாலா போன்றோரின் தேசிய வாதமானது குறுகிய தேசிய வாதமாக வெளிப்பட்டு தமிழ் இனத்தின் மீதான இனவாதத்தை வளர்த்தது.

இவ்வினவாதமானது படிப்படியாக வளர்ந்து தமிழினத்தின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதிலும், தமிழரின் பாரம்பரிய நிலத்தைப் பறிப்பதிலும், ஆரம்பித்து மொழியுரிமை பறிப்பு, இனப்படுகொலை என வளர்ந்தது.

இக்காலகட்டத்தில் தமிழினத் தலைவர்கள் எனப்பட்டோர் தம் வர்க்க நலன்கள் பாதிக்கப்படாத நிலையிலேயே தமிழின உரிமைக்கான போராட்டங்களை நடாத்தினார்கள். இந்நடவடிக்கையானது சிங்கள இனவாதத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் இத்தலைவர்களை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தூக்கி எறிந்தது.

அண்மைக் காலங்களில் தமிழினத்திற்கெதிரான கீழ்வரும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் படிப்படியாக வளர்ந்து உச்சக்கட்டத்தை அடைந்தது.

1. திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றத்தின் மூலம் தமிழர் நிலம் பறிக்கப்பட்டது.

2. சிங்களம் மட்டும் சட்டம் மூலம் தமிழ் மொழி இரண்டாவது பட்சமாக்கப்பட்டது.

3. படிப்படியாக அரச உத்தியோகத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

4. தமிழர் பகுதிகள் பொருளாதார வளர்ச்சியில் புறக்கணிக்கப்பட்டதோடு, தமிழ்ப் பகுதிப் பொருளாதார வளங்கள் சுரண்டப்பட்டது.

5. தமிழ் மாணவரின் உயர்கல்வி வாய்ப்புக்கு தடைவிதிப்புச் செய்யப்பட்டது.

மேற்கண்ட நிலையிலேயே தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்து தேசிய இன விடுதலைப் போராட்டமாக பரிணமித்தது.

இந்நிலையில் தமிழ்த் தலைவர்கள் தமது வர்க்க நலன்களுக்குக் கட்டுப்பட்டு இத்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியாமல் போனதால் இளைஞர் தலைமையிலான ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட இயக்கங்கள் வளர ஆரம்பித்தன. இப்படியாகத் தோன்றி வளர்ந்து வந்த இயக்கங்களானது அதன் பரிணாம வளர்ச்சியில் கண்ட அநுபவங்கள், முரண்பாடுகள், பெற்றுக்கொண்ட படிப்பினைகள் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டவும், அரசியல் மயப்படுத்தவும், சர்வதேச ரீதியாக ஒடுக்கப்படும் உழைக்கும் மக்கள் இயக்கங்களுடன் ஐக்கியப்பட வேண்டிய தேவையையும் உணர்த்தியது.

இப்படிப்பினைகளைப் பெற்றுக்கொண்ட சில அமைப்புக்கள் இன்று மக்களை அணிதிரட்டி அரசியல் மயப்படுத்தி தமது போராட்டங்களை சர்வதேச உழைக்கும் மக்களியக்கங்களுடனும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுடனும், சிறிலங்காவிலுள்ள சிங்கள உழைக்கும் மக்கள் இயக்கங்களுடனும் ஐக்கியப்படுத்தி ஒரு தெளிவான கண்ணோட்டத்தில் போராட்டத்தை வளர்த்து வருவதால் சிறிலங்கா ஆளும் வர்க்கம் கிலி கொண்டுள்ளது. தனக்கு வரும் ஆபத்தை உணர்ந்துள்ளது.

தனக்கு வரும் ஆபத்தை தெளிவாக உணர்ந்துகொண்ட சிறிலங்கா அரசு தமிழீழப் போராட்டத்தை ஒரு தேசிய இனத்தின் போராட்டமாக அல்லாமல் வெறும் இனக்கலவரங்களாகவும், மதக்கலவரங்களாகவும் காட்டப் பகிரப் பிரயத்தனம் எடுத்து வருகிறது. சிறிலங்கா அரசின் இச்சதிவலைக்குள் விளாமல் இருப்பது பொறுப்புள்ள இயக்கங்களின் கடமையாகும்.

சிறிலங்கா அரசின் இச்சதி முயற்சியானது இயக்கங்கள் எங்காவது ஒருசிறு தாக்குதல் நடத்தினால் அதைத் தொடர்ந்து தமிழரின் வழிபாட்டுத் தலங்களை இடிப்பதும், ஏராளமான அப்பாவிகளைக் கொலை செய்வதும், இளைஞர்களைக் கைது செய்வதும், இளம் பெண்களை மானபங்கப்படுத்துவது போன்ற செயல்கள் மூலம் விடுதலை அமைப்புகளை உணர்ச்சி கொள்ளச் செய்து, பழிக்குப்பழி என்ற உணர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமும்; சிங்கள மக்களையும், அவர்களின் வழிபாட்டுத் தலங்களையும் தாக்கி சேதப்படுத்த வைப்பதன் மூலமும் தன்னிலிருந்து அந்நியப்பட்டுப் போகும் சிங்கள உழைக்கும் மக்களை தனக்காதரவாக அணிதிரட்டவும், உலக அரங்

(12-ம் பக்கம் பார்க்க)

பாட்டாளி வர்க்கத்தின் விடிவுக்காய் சிந்தனையைத் தீட்டிய செங்கதிரே தமிழீழ விடுதலையின் ஊடாக உன் இலட்சியத்தை வென்றெடுப்போம்.

5.8.1895

ஏங்கல்ஸ் நினைவுநாள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்